# பூங்கா

POONGA පූංගා
ஜூன் 01 – 15, 2002
மலர்: 05 இதழ்: 24





இலங்கையின் முதலாவது தமிழ் சிறுவர் பத்திரிகை


படங்களுக்குரிய பெயர்களை உரியகோட்டில் எழுதுவோம்



pen
parrot
peacock
pineapple


# P p









P எழுத்தை
எழுதிப்
பழகுவோம்






இங்கே எத்தனை வட்டங்கள்?. .............

எத்தனை நீள்வட்டங்கள்? .............









நான் யார்? கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் என்னை வரையுங்கள்.

மின்சாரம் இல்லாத போது என்னை உபயோகிப்பார்கள்.
என் வேலை முடிந்ததும் உருகி விடுவேன்.


எங்களது இடம் ஆகாயம்.
'பளிச்' என்று கூட்டமாக மின்னுவோம்.
ஆனால் பகலில் தெரியமாட்டோம்.






புள்ளியிடப்பட்ட பகுதியை மாத்திரம் வர்ணம் தீட்டுவோம்

மூன்று பழங்கள் இருக்கின்றன.
ஆனால், ஒரே ஒரு பழத்தையே
குரங்கினால் சாப்பிட முடியும்!
அந்தப் பழம் எது?
**கண்டுபிடியுங்கள்!**






# லியனார்டோ டாவின்சி



மொனாலிசா ஓவியத்தைப் பார்த்திருக்கின்றீர்களா?
அது புன்னகையா, இல்லையா என்று அந்த ஓவியத்தைப் பார்ப்பவர்களுக்கு சந்தேகமாகவே இருக்கும். உலகப் புகழ் பெற்ற அந்த மொனாலிசா ஓவியத்தை வரைந்தவர் லியனார்டோ டாவின்சி. 1506ம் ஆண்டு இவர் அந்த ஓவியத்தை வரைந்தார்.

டாவின்சி ஓவியர் மட்டுமல்ல, சிற்பக்கலை, கட்டிடக்கலை, பொறியியல், அறிவியல் என்று சகல கலைகளும் தெரிந்தவர்.

பறவை பறப்பதைப் பார்த்து பறக்கும் இயந்திரம் கூட செய்யலாம் என்று கற்பனை செய்து பாரசூட், உலங்கு வானூர்தி (ஹெலிகொப்டர்) என்று பறக்கும் இயந்திரங்களை வடிவமைத்தார். அது மட்டுமல்ல, அக்காலத்தில் ‘மறுமலர்ச்சி மனிதன்’ என்றும் இவர் அழைக்கப்பட்டார்.




## விரல்களால்


### நிழல் உருவம் செய்வோமா?



## இலக்கங்களை இணைப்போம்.



# குறுக்கெழுத்துப் போட்டி




## இடமிருந்து வலம்


1. ஜன்னல் என்பதற்கு ஒத்த கருத்து
13. ஒரு வகை தானியம்.
17.. உணவோடு சம்பந்தப்பட்ட ஒரு சொல்.
25. வார நாள் ஒன்றின் பெயர்.

## மேலிருந்து கீழ்

1. அடிக்கடி நிறம் மாறும் ஒரு பிராணி
3. கை என்பதற்கு ஒத்த கருத்து.
6. சித்திரைக்கு அடுத்து வரும் மாதம்.
17. இது மேலே ஏற உதவும்.
27. story என்பதை தமிழில் இப்படிச் சொல்வோம்.

இதற்கான சரியான விடைகளை இதே போன்ற கட்டங்களை தபால் அட்டையில் எழுதி கீழே கொடுக்கப்பட்டுள்ள பூங்கா முகவரியை ஒட்டி ஜூன் மாதம் 20ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.

குறுக்கெழுத்துப் போட்டி
**POONGA**
134, Hulftsdorp Street,
Colombo -12




## பரிசு பெறுவோர்

- கி. அகிதா தரம் 4,
  புனித தோமையர் பெண்கள் பாடசாலை, மாத்தளை.
- ஏ.ஆர். நூருல் ஐன் சித்தூர் முஸ்லிம் கலவன் பாடசாலை, இக்பால் நகர், நிலாவெளி, திருகோணமலை.
- எம்.டப்லியூ. எப். அம்னா
  தரம் 3பீ, சாகிரா தே.பா., மாவனல்லை.
- க.கபிஷ்னா
  ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன்.
- கிருஷ்யா
  தரம் 5பீ, இராகலை தமிழ் ம.வி., ஹல்கரனோயா.
- பஹாத் இப்றாஹீம்
  தரம் 7ஏ(எஸ்)சாகிரா கல்லூரி, கொழும்பு 10.

## பாராட்டு பெறுவோர்

- எம்.ஆர்.எம்.ஸஜா
  தரம் 8சீ, அல் ஹிலால் ம.க., நீர்கொழும்பு.
- ஹஸ்னா சமீம்
  யோனகபுர, திக்வெல்லை.
- கார்த்தீபன் மோகன்
  அசோகா வித்தியாலயம், கண்டி.
- முஹம்மத் ஹாஸிர் நவ்பர்
  குருந்துகஹஎல, அக்குறணை.
- அஹ்மத் மிர்சாத்
  தரம் 5சீ, மதீனா தே.பா., மடவள பஸார்.
- எம்.என்.முஹம்மத் றஹ்மான்
  தரம் 3பீ, அல் நாஸர் ம.வி., கொழும்பு 14.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 42



தம்பி தங்கைகளே இப்படத்தை அழகாக, நேர்த்தியாக வர்ணம் தீட்டி


தபால் அட்டையில்

ஒட்டி கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள பூங்கா முகவரியையும் தபால் அட்டையில் ஒட்டி ஜூன் மாதம் மாதம் 20ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். சிறந்த முறையில் வர்ணம் தீட்டிய தம்பி தங்கைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்

வர்ணம் தீட்டும் போட்டி
POONGA
134, Hulftsdorp Street,
Colombo -12

**பூங்கா முகவரி ஒட்டப்படாத தபால் அட்டைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவு செய்து தம்பி தங்கைகள் கவனத்திற் கொள்ளவும்**

வர்ணம் தீட்டும் போட்டி




- தே. கோகிலசாந்
தரம் 4, இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.
- இசபெல் சுகுமார்
தரம் 7,புனித பிரிஜட்ஸ் கன்னியர் மடம், கொழும்பு 7.
- பூ. கிருபை ராஜா தரம் 5ஏ,
கோட்டைக் கல்லாறு ம.வி., கோட்டைக்கல்லாறு
- பாத்திமா ஹாஜரா ஹாஜா
தரம் 6,முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள்எலிய.
- எப். பஸ்மினா கபூர் தரம் 4ஏ, தெல்தோட்டை
முஸ்லிம் மத்திய கல்லூரி,தெல்தோட்டை
- முஹம்மத் ஹுஸ்னி
இல: 12,வில்பொல, அரனாயக்க.

## பாராட்டு பெறுவோர்

- ஸ்ரீ மோகனதர்ஷன் தரம் 4,
இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, ஆரையம்பதி.
- கே.எஸ்.டீ. ஜனனி
சில்வா டவுன், மாதப்பை.
- வி. ஹேமகாசினி
தரம் 5, களுதாவளை ம.வி., களுவாஞ்சிக்குடி.
- எம்.எப். நுஸ்ரியா
தரம் 2ஏ, அல் முபாரக் ம.க., மள்வானை.
- எம்.ஏ.எப். பஸ்னா தரம் 6ஏ,
அல் அஷ்ரப் மு.ம.வி., மாபோளை,வத்தளை.
- எம்.என்.எப். புஷ்ரா
தரம் 1ஏ, குருகொடை மு.வி. அக்குறணை.

# சித்திரப் பக்கம்



**சாய்மா**
ம் 5, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
வெள்ளவத்தை.




**ஆயிஷா ஜிப்ரி**
தரம் 1சீ, ஹிந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு



**எம்.ரி.எம். ஹிலால்**
தரம் 5, சென். செபஸ்தியன் மு.ம.வி.,
கொழும்பு 12



**எம். எப்.எம்.சபருல்லா**
தரம் 5, சென் செபஸ்தியன் மு.ம.வி.
கொழும்பு 12.



**ஸஹ்ரா நஸ்ரீன்**
தரம் 2, கேகாலை முஸ்லிம் ம.வி.,
கேகாலை.



**எம்.ஆர்.எம். அஸ்வர்**
தரம் 5ஏ, ஓட்டமாவடி தே.பா.,
ஓட்டமாவடி.



**எம்.சாதிக்**
தரம் 8சீ, சாஹிரா கல்லூரி,
மாத்தளை.



**றிஸானா ராமிஸ்**
தரம் 7ரி ஏ, கைரிய்யா மு.ம.ம.வி.,
கொழும்பு 09.



**எஸ்.சஜீதா**
தரம் 7சீ, பாத்திமா மு.ம.க.,
புத்தளம்.



**அமலா**
தரம் 5சீ, கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு 15.



**எம்.கனகராஜா**
தரம் 6, சாந்த மரியாள் கல்லூரி,
அவிசாவளை.



**பி.எம்.எப். பஸ்லிஹா**
தரம் 5, தெல்தோட்டை முஸ்லிம் ம.க.,
தெல்தோட்டை.




**வுத்ராஞ்சனி புஸ்பராஜ்,**
தரம் 4ஏ,
இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு 6.



**ஏ.ஆர்.எம். அர்ஷாத்**
தரம் 5ஏ, பதுரியா வித்தியாலயம்,
காத்தான்குடி.



**ஏ.ஆரிபா**
தரம் 5, அல் ஹிதாயா ம.வி.,
மீராவோடை, மட்டக்களப்பு.



**பவஜீவன்**
தரம் 2, விவேகானந்தாக் கல்லூரி,
கொழும்பு


# மந்திர கத்தரிக்கோல்



ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனிடம் ஒரு மந்திரக் கத்தரிக்கோல் இருந்தது. மன்னரிடம் நீதி கேட்டு வருபவர்கள் அதனுள் தன் விரலை வைத்துக் கொண்டு தங்கள் குறையைக் கூறுவர். அவர்கள் உண்மையைக் கூறினால் ஒரு பிரச்சினையுமில்லை. பொய் கூறினாலோ, உடனே அது விரலை வெட்டி விடும். அதனால் மக்கள் பொய் கூறவே அஞ்சினர்.

ஒருநாள் மகேந்திரன், சுந்தரம் ஆகிய இரண்டு வைர வியாபாரிகள் மன்னனிடம் வந்தனர். மகேந்திரன் கூறினான், " நான் வைர வியாபாரம் செய்பவன். சில விலை உயர்ந்த இரத்தினக் கற்களை சுந்தரத்திடம் கொடுத்து விட்டு வெளியூர் சென்றேன். இப்போது வந்து கேட்டால், திருப்பித் தந்துவிட்டதாகக் கூறுகிறான்." மகேந்திரன் தன் விரலை கத்தரிக்கோலின் நடுவில் வைத்துக் கொண்டு கூறினான். மகேந்திரனுக்கு எதுவும் நடக்கவில்லை.

இப்போது சுந்தரம் தன் கையில் இருந்த கைத்தடியை மகேந்திரனிடம் கொடுத்து விட்டு, விரலை கத்தரிக்கோலின் நடுவில் வைத்து கூறினான். "நான் அவனிடம் இரத்தினக் கற்கள் வாங்கியது உண்மைதான் , ஆனால் நான் அதை திருப்பிக் கொடுத்து விட்டேன் " என்றான். கத்தரிக்கோல் சுந்தரத்தையும் ஒன்றும் செய்யவில்லை. மகேந்திரனிடம் கொடுத்த கைத்தடியை மீண்டும் வாங்கிக் கொண்டு அமைதியாக நின்றான் சுந்தரம்.






மன்னனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் கத்தரிக்கோல் இருவரையும் ஒன்றும் செய்யவில்லை? இதில் யார் சொல்வது உண்மை?

அப்போது அங்கு வந்த அமைச்சர் சிக்கலைத் தீர்த்து வைத்தார். சுந்தரத்தின் கைத்தடியை உடைத்துப் பார்த்தார். அதனுள் இரத்தினக் கற்கள் இருந்தன. அமைச்சர் மன்னனிடம் கூறினார் " சுந்தரம் கத்தரிக் கோல் நடுவில் கை வைப்பதற்கு முன் தனது கைத்தடியை மகேந்திரனிடம் கொடுத்து விட்டான். அதனால், கைத்தடிக்குள் இருந்த இரத்தினக் கற்களை மகேந்திரனிடம் திருப்பி கொடுத்து விட்டதாக ஆயிற்று. அதனால் தான் மந்திரக் கத்தரிக்கோல் சுந்தரத்தை ஒன்றும் செய்யவில்லை."

மன்னனுக்கு சுந்தரத்தின் தந்திரம் கோபத்தை உண்டாக்கியது. இரத்தினக் கற்கள் மகேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டன. சுந்தரம் சிறையில் அடைக்கப்பட்டான்.

---



ஓட்டுக்குள்ளே ஒளிந்திருக்கும்
ஆமை மாமா - நீ
கூட்டை விட்டு கழுத்தைக் கொஞ்சம்
நீட்டு மாமா


தீங்கு செய்ய எண்ணமில்லை
ஆமை மாமா - நீ
தூங்குவதாய் நடிப்பதென்ன
சொல்லு மாமா

ஏட்டைத் தூக்கி நடந்து வரும்
என்னைப் போல - நீ
ஓட்டைத் தூக்கி அசைந்து வர
வேண்டும் மாமா.

## படத்தைப் பார்த்து



## 5 வசனங்கள் எழுதுவோம்



.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................





**தபால் மூலம் பூங்காவை உங்கள் வீட்டுக்கே வரவழைத்துக் கொள்ளுங்கள்!**

வருடாந்த சந்தா 360/=

ஆறு மாதங்களுக்கு 180/=


பணத்தை காசுக் கட்டளையாக (மணி ஓடர்) அனுப்புங்கள்.

காசுக் கட்டளையில் பணம் பெறுபவர்
Poonga, Circulation Manager என்றும்
பணம் பெறும் கந்தோர் Colombo Courts
என்றும் குறிப்பிடுக.

**POONGA,**

**134, Hulftsdorp Street, Colombo 12. Tel: 543691, 074 715495**

## எனது நண்பி



எனது நண்பியின் பெயர் பாத்திமா பஸ்லா. அவளின் வயது 12. அவள் முகர்ரமா சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கிறாள். அவள் என்னுடன் மிக அன்பாக இருப்பாள்.

பாத்திமா சானாஸ்
தரம் 7 அல் ஹிதாயா மு.ம.வி.
கொழும்பு-10

## எனது ஊர்



எனது ஊர் வாழைச்சேனை. எனது ஊரில் பாடசாலை, வைத்தியசாலை, தபாலகம், வங்கி, நூல் நிலையம் போன்றன இயங்குகின்றன.

எனது ஊரில் தேசிய கடதாசி ஆலை அமைந்துள்ளது. எனது ஊர் மக்களின் தொழில் விவசாயம், மீன்பிடித்தல், இறால் வளர்ப்பு போன்றவையாகும்.

எம்.எம்.பாத்திமா சப்ரா
ஆண்டு 2பீ,
அந்நூர் தேசிய கல்லூரி,
வாழைச்சேனை.



## நான்

எனது பெயர் ஷாஹித் அஹ்மத். எனது வயது ஏழு. நான் இரண்டாம் தரத்தில் கல்வி கற்கிறேன். எனது செல்லப் பிராணி கிளி. என் அப்பாவின் பெயர் முஹம்மத் நஸீர். என் அம்மாவின் பெயர் உம்முல் மதீனா.

எம்.என். ஷாஜித் அஹ்மத், தரம் 2ஏ,
பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை.

## பழமொழி

1. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்.
2. ஆழமறியாது காலை விடாதே.
3. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
4. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
5. உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பறந்தாகுமா?

றோஜர்,
தரம் 5, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை,
கொழும்பு 15.

## விடுகதை

வெளியில் போகும் போது நண்பன்
வீட்டுக்குள் வந்தால் விரோதி
அவன் யார்?

காது போனால் வாழ்வே போகும்
அவன் யார்?


கொதிக்கும் கிணற்றில் குதிப்பான்
கூச்சல் இல்லாமல் குளிப்பான்.
அவன் யார்?

புஷ்ரா இக்பால்,
தரம் 4பீ, உலப்பனை மு.வி.,
உலப்பனை.

## பூங்கா

என் இனிய பூங்காவே!
சின்னக் கதையும் சித்திரமும்
கொண்டு
சிறுவர் எம் கையில் மலர்வாய்.
அழகுப் பூங்காவே
தடையின்றி நீ எந்நாளும்
வர வேண்டும்.

பி.என். ஷர்மிலா தரம் 9,
சாஹிராக் கல்லூரி, குருநாகலை.




மலர் : 5 இதழ் : 24 ஜுன் 01-15 - 2002


பூங்கா

## தரம் 5, புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி பயிற்சிகள்


வினாத்தாள் : 1

01. தரப்பட்டுள்ள படங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவ்வச் சதுரங்களில் பக்கத்தில் உள்ள ஒன்றைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.





02. தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுக.



1 3 5 7 9 11

இக்கொடிகள் ஒவ்வொன்றும் ஒற்றை எண்களும், நிறங்கள் நீலம், சிவப்பு, பச்சை என்ற ஒழுங்கிலும் உள்ளன. இவ்வாறாக 20 கொடிகள் உள்ளன.

03. 15 வது கொடியின் நிறமும் இலக்கமும் யாது? நிறம்........................................ இலக்கம்........................................

04. ஏனைய கொடியை விட வித்தியாசமான ஒரு கொடி உள்ளது அக்கொடியின் நிறமும் இலக்கமும் யாது?
நிறம்........................................ இலக்கம்........................................

05. இரண்டு கொடிகளுக்கிடையே உள்ள தூரம் $4m$ எனின் 5 கொடிகளுக்கிடையே உள்ள தூரம் எத்தனை மீற்றர்? ........................

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதல் வாக்கியத்தின் கருத்துக்கேற்ப இரண்டாவது வாக்கியத்திலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.

06. வகுப்பறையில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனும் ஆசிரியருக்குக் கட்டுப்படுவது அவசியமாகும்.
இது மாணவனின்( உரிமை, கடமை, சுதந்திரம்) ஆகும்.

07. காற்று, நீர், நிலம் என்பன மனிதனுக்கு மிகவும் பயன் உள்ளவை ஆகும்.
இந்த இயற்கை (பொருள்களை, சொத்துக்களை, வளங்களை) பாதுகாப்பது அவசியமாகும்.

08. " முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் " என்பதற்கு ஏற்ப அவன் சாதனையை எட்டினான்.
காரணம் அவனின் ( அயராத தூக்கம், கடின உழைப்பு, சோம்பல்) ஆகும்.

09. காதர் மயக்கமுற்று கீழே விழுந்தான், "ஐயோ பாவம" என்று கூறி குமாரும், முனசிங்கவும் ஓடிச் சென்று உதவினர்.
இங்கே நாம் காணக் கூடியது (நண்பர்கள், மனிதாபிமானம், உறவு)

10. வேட்டையாடுவதும், காட்டை அழிப்பதும் குற்றச் செயல் மட்டுமல்ல, நம் நாட்டுக்குச் செய்யும் அநீதியுமாகும்.
இத்தகையவர்கள் ( தண்டிக்கப்பட, மன்னிக்கப்பட, பாராட்டப்பட) வேண்டும்.

**பின்வரும் வினாக்களின் ஆரம்பத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் அதற்கு எதிரே அதனைக் குறிக்கும் இரகசிய இலக்கக் குறியீடுகளும் உள்ளன. அச்சொல்லைக் குறிக்கும் சரியான குறியீட்டின் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11. | சங்கீதம் | 1) 47523 | 2) 01340 | 3) 32572 | 4) 12344 | .............................. |
| 12. | பப்படம் | 1) 32495 | 2) 34295 | 3) 32345 | 4) 77754 | .............................. |
| 13. | சுறுசுறுப்பு | 1) 453527 | 2) 363636 | 3) 243865 | 4) 363647 | .............................. |
| 14. | பம்பரம் | 1) 43257 | 2) 43423 | 3) 14524 | 4) 34574 | .............................. |
| 15. | விகடகவி | 1) 12321 | 2) 32132 | 3) 12121 | 4) 11212 | .............................. |

**குறித்த ஒரு விளையாட்டு வீரரின் ஓட்ட வேகம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.**

| நேரம் | 6 மணி 7 மணி வரை | 7 மணி 8 மணி வரை | 8 மணி 9 மணி வரை | 9 மணி 10 மணி வரை |
|---|---|---|---|---|
| ஓடிய தூரம் | 8km | 15 km | 21 km | 26 km |

16. இவ் வீரரின் ஓட்ட வேகம் கூடிச் செல்கிறதா? குறைந்து செல்கிறதா? ..............................................
17. 11 மணி முடிவில் எத்தனை km ஓடி இருப்பார்? ..............................................
18. இரண்டாவது மணித்தியால முடிவில் அவனது வேகம் மணித்தியாலத்திற்கு எத்தனை km?

**குறித்த நிறுவனமொன்றில் வருடா வருடம் தொழிற் பயிற்சி பெற்ற ஆண்கள், பெண்களின் விபரம் அட்டவணையில் உள்ளது. அதனை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 80 | 70 | 61 | ........... | 46 |
| பெண் | 56 | 60 | 66 | 74 | 84 |

19. இந்நிறுவனத்தில் 1995 ம் வருடம் பயிற்சி பெற்ற ஆண்கள் எத்தனை பேராக இருக்கலாம்? ..............................................
20. எதிர்காலத்தில் இத்தொழிற்சாலையில் அதிகமாக பயிற்சி பெறுவோர் ஆண்களா? பெண்களா? ..............................................
21. குறித்த இரு ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை சமமாகும். அவ்விரு ஆண்டுகளும் எவை? ..............................

22. **கீழேயுள்ள வாக்கியங்களில் எழுத்துக்கள் பிழையில்லாத வாக்கியத்தை கண்டறிந்து அதன் கீழ் கோடிடுக.**
1. அவன் காலையில் பாடம் படித்தாண்.
2. பறவைகள் அதன் அளகுகளால் கூடு கட்டும்.
3. கடற்கரையில் நண்டுகள் ஓடி மறைந்தன.
4. அறையில் அழகைச் சத்தம் கேட்டது.

(வினாப் பத்திரம் 1ன் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்)

# வர்ணம் தீட்டுவோம்



# அரும்புகள் அறிமுகம்


Registered as a News Paper in Sri Lanka Reg. G.P.O. Q.D/65/News/2002



**முஹம்மத் உமைர்**
சின்ன புதுக்குடியிருப்பு,
பொத்துவில்.



**ஆர். வசந்த குமாரி**
தரம் 7, சரஸ்வதி தமிழ் வித்தியாலயம்,
முவான்கந்த.



**நுஸ்கியா ஹனீம்**
கெப்பிட்டிய, கலேவெல.



**பாத்திமா அப்றா**
தரம்1, அல் நாஸர் மு.வி.,
கொழும்பு 14.



**சோபிதா**
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13



**கிரிஷாந்தினி**
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13



**எம்.எம்.எம். பஹாத்**
தரம் 6ஏ, நூராணியா மு.ம.வி.,
மாவனல்லை.



**எம்.எல்.ஏ. சனாஉல்லாஹ்**
தரம் 3, தாருல் உலூம் மு.ம.வி.,
றம்புக்கன.



**பாத்திமா பஸ்னா**
கட்டுகஸ்தோட்டை.



**எம்.அஸ்மில் முயீஸ்**
ஹில் வீதி,
கம்பளை.



**எப். சதீகா**
தரம் 7பீ, அமீன் மத்திய கல்லூரி,
அலபடகம.



**றஷ்மி செஹாறா குமாரி**
இரட்சனிய சேனை பாலர் பாடசாலை,
கொழும்பு 12.



**எச்.எம்.அம்ஜத்**
தரம் 4டி, டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரி,
கொழும்பு 08.



**எஅஹமத் தில்ஷாத்**
பாலர் பாடசாலை,
மாளிகாவத்தை.



**எஸ்.ஷானுஜா**
தரம் 3, வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலை,
மட்டக்களப்பு



**ஏ.எம். சஹ்ரின்**
மதீனா தேசிய பாடசாலை,
சியம்பலாகஸ்கொட்டுவ.

Printed by Printcom (Pvt) Ltd. 134, Hulftsdorp Street, Colombo 12. Tel: 543691